பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

“நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்” (அல்குர்ஆன் 5:2)

**இதழ் : 18** | **துல்கஃதா- 1433** | **செப்டம்பர், 2012**

## இஸ்லாத்தின் பார்வையில் கடமையும் பொறுப்பும்

ஒரு முஸ்லிம் தான் ஏற்றுக் கொண்ட கடமையை, பொறுப்பை மிகச் சரியாக நிறைவேற்ற வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் இறைத்தூதர் என்ற தனது பொறுப்பை மிகுந்த தியாகத்தோடும் அர்ப்பணிப்போடும் நிறைவேற்றினார்கள். தனது கடமையையும் பொறுப்பையும் செவ்வனே நிறைவேற்றியமையினால்தான் நபியவர்கள் நம்மைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள்: ‘நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள், உங்களது பொறுப்பைப் பற்றி நாளை மறுமையில் விசாரிக்கப்படும்’ (புஹாரி, முஸ்லிம்).

குடும்பத் தலைவர் என்ற சிறிய அளவிலான பொறுப்பாக இருந்தாலும் நிறுவனத் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர் மற்றும் நாட்டின் தலைவர், முதலமைச்சர், அமைச்சர் என்பன போன்ற பாரிய பொறுப்புகளாக இருந்தாலும் ஒருவர் தனது பொறுப்பைப் பற்றி மறுமையில் அல்லாஹ் கேட்கவிருக்கும் கேள்விகளுக்கு பதில் கூறாமல் ஓர் எட்டுக் கூட நகர முடியாது என்ற அச்ச உணர்வோடு ஒவ்வொருவரும் தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

ஒருவர் தான் ஏற்றிருக்கும் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றாமல் அலட்சியப் போக்கோடு இருப்பாராயின் அவர் உண்மையான முஸ்லிமாக இருக்க முடியாது. பொறுப்புகளை வீணடிப்பது, அதில் மோசடி செய்வது முனாபிக்குகளின் பண்பு என நபியவர்கள் குறிப்பிட்டார்கள் (புஹாரி, முஸ்லிம்). முனாபிக்குகள் நரகத்தின் அடித்தட்டில் இருப்பார்கள் என்று அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான் (4 : 145).

மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த நிலையில் பல முஸ்லிம் சகோதரர்கள் சமூகத்தை வழிநடத்துகின்ற பாரிய பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வெற்றியைத் தருவதும் தோல்வியைத் தருவதும் அல்லாஹ்தான் என்ற அசைக்க முடியாத ஈமானிய உணர்வுடன், இத்தேர்தலில் வெற்றிபெற்றோர் அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட இப்பாரிய பொறுப்பை இறையச்சத்தோடும் சமூக உணர்வுடனும் நிறைவேற்ற வேண்டியது முக்கியமாகும்.

சமூகத்தை வழிநடத்துகின்ற பொறுப்பை ஒருவர் ஏற்றுக்கொண்டார் எனில் அவர் அச்சமூகத்திலுள்ள அத்தனை அங்கத்தவர்களையும் நீதியாகவும்,நியாயமாகவும் நடத்த வேண்டும். தனக்கு விருப்பமானவர்களுக்கு மாத்திரம் சேவைபுரிவது, தனக்கு பிடிக்காதவர்களை ஓரங்கட்டுவது, தனது பதவியைப் பயன்படுத்தி பழிவாங்குவது, பாரபட்சம் காட்டுவது என்பன அல்லாஹ்விடம் மிகப் பெரும் குற்றமாகும்.

தனக்கு பிறர் அநீதி இழைத்திருந்தாலும் அவர்களை மன்னிப்பது,அனைவரையும் சமமாக நோக்குவது, பாரபட்சமின்றி நீதியின் நிழலில் தனது சேவைகளை அனைவருக்கும் வழங்குவது என்பன உண்மையான முஸ்லிம் தலைவர்களிடம் காணப்பட வேண்டிய உயர் பண்புகளாகும்.

இத்தருணத்தில், பொறுப்புக்களை ஏற்றிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் நபிகளார் மக்காவை வெற்றிகொண்ட வரலாற்றை ஆழமாக வாசித்தறிவது அவசியமாகும். நபிகளார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் தனது ஸஹாபாக்கள் சகிதம் மதீனாவிலிருந்து படைதிரட்டி வந்து மக்காவை இரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் வெற்றி கொண்ட போது, ஒரு தலைவர் மக்களோடு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்தினார்கள். அவர்கள் பெரும் வெற்றி நாயகராக மக்காவில் பல நாட்கள் வலம் வந்த போதும் தனக்கு ஒரு காலத்தில் அநியாயம் செய்த மக்களைக் கூட மன்னித்து, அவர்களையும் தமது தோழர்களாக, சகோதரர்களாக மதித்து நடந்தார்கள்.

அத்தகையதொரு மகத்தான வெற்றியை அவர்கள் பெற்றிருந்த போதும் அவர்களது பேச்சிலோ, நடையிலோ சிறிதும் மமதை, கர்வம் துளியளவும் இருக்கவில்லை. உச்சக்கட்ட பணிவுத் தன்மையை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். நபியவர்களுடன் இருந்த ஸஹாபாக்களில் ஒருவர் மக்காவாசிகளைப் பார்த்து, ‘இன்றைய தினம் பழிவாங்கும் தினம்’ என்று குறிப்பிட்ட போது, அதைக் கடுமையாகக் கடிந்துகொண்ட நபிகளார், ‘இன்றைய தினம் கருணை, இரக்கம் என்பவற்றின் தினம்’ என முழங்கினார்கள்.

**மார்க்க விடயங்களையும் தஃவா செய்திகளையும் உங்கள் கையடக்கத் தொலைபேசியில் அறிந்துகொள்ள**
**f evrtj என்று Type செய்து 40404க்கு**
**SMS அனுப்பி வையுங்கள். இது முற்றிலும் இலவசமானது.**
**(Airtel & Hutch வலையமைப்புகளைத் தவிர)**

மக்காவின் வீதியொன்றில் நபியவர்கள் நடந்துசென்று கொண்டிருந்த போது ஒரு மக்காவாசி நபியவர்களைப் பார்த்து நடுங்கிக்கொண்டிருந்தான். வெற்றி நாயகர் பெருமானார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அவரிடம் சென்று 'நீர் ஏன் என்னைக் கண்டு நடுங்க வேண்டும். காய்ந்த இறைச்சித் துண்டை பல நாட்களாக சேமித்து வைத்து சாப்பிட்டு வளர்ந்த ஒரு தாயின் மகன்தான் நான்' என்று கனிவோடு கூறினார்கள். அத்தனை வெற்றிக் களிப்பிலும் எத்தனை பணிவுத் தன்மை !

நபிகளாரின் அழகிய முன்மாதிரியை நமது மக்கள் பிரதிநிதிகளும் கடைப்பிடிக்க வேண்டும். தமது சுய இலாபங்களை நோக்காகக் கொள்ளாமல் சமூக நலன்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். சமூக நலனுக்காகவும் சமூகத்தின் முன்னேற்றம், அபிவிருத்திக்காகவுமே தம்மை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்பதை அவர்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. ஊழல், மோசடி, துஷ்பிரயோகம் ஆகியவை பெரும் பாவங்கள் என்பதை மனதில் இருத்தி, நான் நபிகளார் வளர்த்த உலகளாவிய முஸ்லிம் உம்மாவின் உயர்வுமிக்க ஓர் அங்கத்தவன் என்ற உணர்வோடு தமது கடமையை ஆற்ற வேண்டும்.

நபிகளாரின் காலத்தில் நபியவர்கள் ஒரு நபித்தோழரை ஸகாத் பொருட்களை வசூலித்து வருவதற்காக ஒரு கூட்டத்தாரிடம் அனுப்பி வைத்தார்கள். அந்த ஸஹாபி தான் வசூலித்த ஸகாத் பொருட்களை நபியவர்களிடம் கொண்டு வந்து கொடுத்து 'இவை ஸகாத் பொருட்கள்' என்று கூறிவிட்டு மற்றுமொரு பகுதிப் பொருட்களை தன்னிடம் வைத்துக்கொண்டு 'இவை மக்கள் எனக்குத் தந்தவை' என்று கூறினார். அப்போது மிகக் கடுமையாகக் கோபப்பட்ட நபிகளார், 'இவர் தனது தாய், தந்தையரின் வீட்டில் இருந்திருந்தால் இவை இவருக்கு கிடைத்திருக்குமா?' என்று கேட்டு விட்டு, அவற்றையும் மக்களுக்கு வழங்குவதற்காக அவரிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். பொதுச் சொத்துகளை தனக்காகச் சேமித்துவைப்பது பெரும் பாவம் என்பதை இதன் மூலம் உணர்த்தினார்கள்.

பொதுச் சொத்துகள் விடயத்தில் நபியவர்கள் மிகமிகக் கவனமாக நடந்துகொண்டார்கள். பொதுச் சொத்தில் ஒரு துளியேனும் தனது உடலிலோ, உதிரத்திலோ, தனது குடும்பத்திடமோ சேர்ந்துவிடக்கூடாது என்பதில் மிக உறுதியாக இருந்தார்கள். ஒரு தடவை மதீனாப் பள்ளிவாசலில் குவிக்கப்பட்டிருந்த ஸகாத் பேரீத்தம்பழங்களுள் ஒன்றை தனது பேரர் வாயில் போட்டுக்கொண்டதைக் கண்ட நபியவர்கள், ஓடோடி வந்து தனது பேரரின் வாயில் தனது விரலை விட்டு அப் பேரீத்தம்பழத்தை வெளியேற்றினார்கள். இவை யாவும் நமது மக்கள் பிரதிநிதிகளுக்கு பாடமாக மனதில் நிற்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இங்கு மூவினத்தாரும் வாழ்கின்றனர். அனைத்து இன மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் மக்கள் தலைவர்கள் நடந்துகொள்ள வேண்டும். நபியவர்கள் மதீனா சென்றடைந்து இஸ்லாமியப் பேரரசை மதீனாவில் நிறுவிய போது அங்கு சிறுபான்மையினராக வாழ்ந்த யூதர்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும் நோக்கில் அவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். பிற சமூகத்தார் நமக்கு அநீதி இழைக்கிறார்கள் என்பதற்காக பதிலுக்கு பதில் அநீதி இழைப்பவர் ஒரு முஸ்லிமாக இருக்க முடியாது.

இந்நாட்டில் வாழும் - குறிப்பாக கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. உரிமை சார்ந்த பிரச்சினைகள், அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள் போன்றவற்றை முஸ்லிம்கள் பல்லாண்டுகளாக சந்தித்து வருகிறார்கள். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி சுமுகமான தீர்வுகளைக் காண அயராது உழைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு ஈமானிய உணர்வையும் சமூகப் பற்றையும் வழங்கி, அவர்கள் மூலம் சமூகம் ஈடேற்றம் காண அருள்புரிவானாக.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் :
"உன் சகோதரன் அநியாயக்காரனாக இருக்கும் நிலையிலும் அநீதிக்குட்பட்டவனாக இருக்கும் நிலையிலும் அவனுக்கு உதவி செய்" என்று கூறினார்கள். மக்கள், "இறைத்தூதர் அவர்களே! அநீதிக்குட்பட்டவனுக்கு நாங்கள் உதவுவோம். அநியாயக்காரனுக்கு நாங்கள் எப்படி உதவுவோம்?" என்று கேட்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "அவனுடைய கைகளைப் பிடித்து (அநியாயம் செய்யவிடாமல் தடுத்து)க் கொள்வாய். (இதுவே, நீ அவனுக்குச் செய்யும் உதவி)" என்று கூறினார்கள்.
(ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி)

## மோதிரத்தை தர்மம் செய்த பெண்மணி

கடந்த நோன்புப் பெருநாள் தினத்தன்று ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நோன்புப் பெருநாள் திடல் தொழுகையின் போது தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளாத சகோதரி ஒருவர் இப்பிரதேசத்தில் த∴வா செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக தனது மோதிரம் ஒன்றை தர்மம் செய்திருந்தார்.

ஏறாவூர் ஆற்றங்கரை மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நோன்புப் பெருநாள் தொழுகையைத் தொடர்ந்து நடைபெற்ற சொற்பொழிவின் போது, நபியவர்களின் காலத்தில் பல ஸஹாபிப் பெண்கள் தமது கை வளையல்களை இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக தர்மம் செய்தார்கள் என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து, நமது ஊரைச் சேர்ந்த சகோதரி தனது மோதிரத்தை மறைமுகமாக தர்மம் செய்ததன் மூலம், ஸஹாபிப் பெண்களின் காலத்தை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தியதோடு, பிற பெண்களுக்கும் முன்மாதிரியாக நடந்திருக்கிறார்.

புகழையும் பிரபல்யத்தையும் எதிர்பார்த்து தர்மங்கள் செய்யப்படும் இக்காலகட்டத்தில் அல்லாஹ்விடம் மாத்திரம் கூலியை எதிர்பார்த்து இத்தகைய நற்காரியத்தை புரிந்த சகோதரிக்கு அல்லாஹ் ஈருலகிலும் நல்லருள் புரிவானாக.

# இஸ்லாமியச் சகோதரிக்கு ஒரு திறந்த மடல்

அன்பின் இஸ்லாமியச் சகோதரியே!

ஏக நாயன் அல்லாஹ்வையும் அவனது அருமைத் தூதரையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டிருக்கும் நீ, இவ்வுலக வாழ்வின் நிலையாமையையும் மறுவுலக வாழ்வின் நித்தியத் தன்மையையும் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்டிருக்கிறாய். உனக்கென்று சில வரையறைகள் உள்ளன. அவை உன்னைப் படைத்த இறைவன் உன் நல்வாழ்வுக்காக இட்ட வரம்புகள். அவற்றை நீ மீறாமல் நடந்துகொண்டால் ஈருலக வாழ்விலும் வெற்றியடைந்து விடலாம் என்பதை மறந்துவிடாதே.

இவ்வுலக வாழ்வில் நீ பல வெற்றிகளைக் குவித்திருக்கலாம், பல சாதனைகளை நிகழ்த்தியிருக்கலாம். அல்லது பல தோல்விகளைச் சந்தித்து துன்பங்களில் துவண்டிருக்கலாம். நினைவில் வைத்துக்கொள். இவ்வுலகில் கிடைக்கும் வெற்றிகளோ, தோல்விகளோ நிலையானவையல்ல. மறுமையில் கிடைக்கும் வெற்றிதான் நிலையானது, மறுமையில் சந்திக்கும் தோல்விதான் நிரந்தரமானது என்பதை உணர்ந்து, அதற்கேற்ப இவ்வுலகில் வாழப் பழகிக்கொள்.

அல்லாஹ் கூறுவதை நன்கு செவிமடுத்துக்கொள். 'யார் வரம்பு மீறி, இவ்வுலக வாழ்வை தேர்ந்தெடுத்துக்கொண்டாரோ நிச்சயமாக அவர் ஒதுங்குமிடம் நரகமாகும். யார் (மறுமையில்) தன் இரட்சகன் முன் நிற்பதைப் பயந்து மனோ இச்சையை விட்டு மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டாரோ நிச்சயமாக அவர் ஒதுங்குமிடம் சுவர்க்கமாகும்' (79 : 37 - 41).

உன் மறுமை வாழ்வு தோல்வியடைந்துவிடக் கூடாது. மறுமையில் தோல்வியடைவதுதான் மிகப் பெரும் கைசேதமாகும், ஈடு செய்ய முடியாத இழப்பாகும். உன் மறுமை வாழ்வு தோல்வியடைவதற்கு மிக முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால், உனது ஆடைகள் விடயத்தில் மார்க்கம் விதித்துள்ள வரம்புகளை மீறி நடப்பதாகும். அவ்வாறெனில் மார்க்கம் விதித்த வரம்புகள் எவை எனக் கேட்கிறாயா? சொல்கிறேன் கேள்:

1. நீ அணியும் ஆடைகள் மெல்லியதாகவோ, இறுக்கமானதாகவோ இருக்கக் கூடாது. குட்டையான, அரைகுறையான, இறுக்கமான, மெல்லிய ஆடைகளை அணியும் பெண்களை நபியவர்கள் ''ஆடை அணிந்த நிர்வாணிகள்'' என்று வர்ணித்தார்கள். இத்தகைய பெண்கள் நரகவாதிகள், அவர்கள் சுவர்க்கத்தில் நுழையமாட்டார்கள், சுவர்க்கத்தின் வாடையைக் கூட முகரமாட்டார்கள் என்று நபிகளார் எச்சரித்துள்ளார்கள் (புஹாரி, முஸ்லிம்).

ஒரு தடவை நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களுடன் ஆஇஷா றழியல்லாஹுஅன்ஹா அவர்கள் இருக்கும் போது அஸ்மா றழியல்லாஹுஅன்ஹா அவர்கள் வருகிறார்கள். அப்போது அவர்களது ஆடை மிக மெல்லியதாக இருந்தது. அதைக் கண்ட நபியவர்கள் 'அஸ்மாவே! ஒரு பெண் பருவமடைந்து விட்டால் (முகத்தையும் மணிக்கட்டுக்கைகளையும் சுட்டிக்காட்டி) இவ்விரண்டையும் தவிர ஏனையவை வெளித்தெரியக் கூடாது' என்று கூறினார்கள் (அபூதாவூத்).

2. ஒரு பெண்ணின் தலைமுடி, கழுத்துப் பகுதி, இரு கைகள், கால் பாதங்கள் உட்பட அனைத்தும் மறைக்கப்பட வேண்டியவையாகும். சாரி அல்லது சல்வார் அணியும் பல பெண்களின் கைகள், கழுத்து என்பன மறைக்கப்படுவதில்லை. சிலர் மறைக்கிறார்கள். ஆனால் தமது உடல் அங்கங்கள் தெரியும் விதமாக இறுக்கமாக அணிகிறார்கள். பெரும்பாலான பெண்கள் தமது கால் பாதங்களை மறைப்பதே இல்லை. இவையெல்லாம் ஹறாமாகும்.

பெண்களில் ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். அவர்கள் சொந்த ஊரில் இருக்கும் போது முழுமையாக தங்களை மறைத்துக்கொள்கிறார்கள். திருமண வீடு, வெளியூர்ப் பயணம் என்று வந்துவிட்டால் தங்களது ஹிஜாபுக்கு விடுமுறை வழங்கிவிடுகிறார்கள். மற்றும் பல இளம் பெண்கள் டியூஷன் வகுப்புகள், உத்தியோகம் போன்றவற்றுக்காக வெளியூர் செல்லும் போது ஹிஜாபைத் துறந்துவிடுகிறார்கள். இவர்கள் சமூகத்துக்குத்தான் பயப்படுகிறார்களே தவிர உண்மையாக பயப்பட வேண்டிய அல்லாஹ்வுக்குப் பயப்படவில்லை.

பெண்களில் மற்றுமொரு பகுதியினர் இருக்கிறார்கள். அவர்களது கணவர் அல்லது பெற்றோர் வீட்டில் இருக்கும் போது ஆண்கள் யாரும் வந்தால் மறைந்துகொள்வார்கள். ஆண்களுக்கு முன் வரமாட்டார்கள். கணவரோ, பெற்றோரோ வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் ஆண்கள் யாரும் வந்துவிட்டால் சர்வசாதாரணமாக அவர்களுக்கு முன்னிலையில் வந்து நீண்ட நேரம் உரையாடுகிறார்கள். இவர்கள் கணவன்மாருக்கும் பெற்றோருக்கும் பயப்படுகிறார்களே தவிர படைத்த இறைவனுக்கு அஞ்சுவதில்லை. அல்லாஹ் அனைத்தையும் உற்று நோக்கிக்கொண்டிருக்கிறான் என்பதை உணர்வதில்லை.

சகோதரி! இவ்வாறு கூறும்போது அனைத்துப் பெண்களும் இப்படிப்பட்டவர்களா என்று நீ கேட்கலாம். நிச்சயமாக இல்லை. இரட்டை வேடம் போடாத, அல்லாஹ்வுக்கு மாத்திரம் அஞ்சி வாழக்கூடிய பெண்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை ஒருபோதும் மறந்துவிடமுடியாது. அத்தகைய பெண்களுக்கு அல்லாஹ் அருள்புரிவானாக. இத்தகைய ஸாலிஹான பெண்களை ஏனைய பெண்களும் முன்மாதிரிகளாகக் கொள்வார்களாக.

3. சகோதரி! பெண்களின் இயல்பையும் தன்மையையும் கருத்திற்கொண்டு அவர்களின் கற்புக்கும் மானத்திற்கும் உயிருக்கும் பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக இஸ்லாம் சில கட்டுப்பாடுகளை பெண்கள் மீது விதித்திருப்பதை அறியாத இன்றைய பெண்களில் பலர் கட்டுப்பாடுகளை மீறி நடக்கிறார்கள். பிறருக்கு வாசனை வீசும் வகையில் ஆடைகளில் மணம் பூசிச் செல்வதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. ஏனெனில் ஒரு பெண் வாசனை வீசும் வகையில் மணம் பூசிக்கொண்டு பிறருக்கு முன் செல்லும் போது அதன் மூலம் ஆண்கள் கவர்ந்திழுக்கப்பட்டு அப்பெண்ணை தவறான முறையில் அணுகுவதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது. 'எந்தப் பெண்ணேனும் மணம் பூசிக்கொண்டு வாசனை வீசும் வகையில் ஒரு கூட்டத்தைக் கடந்துசென்றால் அப்பெண் ஒரு விபசாரி ஆவாள்' (நஸாஈ, அஹ்மத்) என்று நபியவர்கள் மிகக் கடுமையாக எச்சரித்திருப்பதை நன்றாக மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். ஆனால் வீட்டில் இருக்கும் போது பெற்றோருக்கோ, கணவருக்கோ, பிள்ளைகளுக்கோ வாசனை வீசும் வகையில் மணம் பூசிக்கொள்வதில் தடையேதும் இல்லை.

4. ஆண்களின் ஆடைகளுக்கு ஒப்பான ஆடைகளை பெண்கள் அணிவதை நபியவர்கள் முற்றாகத் தடுத்திருக்கிறார்கள். ஆண்களின் ஆடைகளுக்கு நிகரான ஆடைகளை அணியும் பெண்களையும் பெண்களின் ஆடைகளுக்கு நிகரான ஆடைகளை அணியும் ஆண்களையும் நபிகளார் சபித்துள்ளார்கள்.

அன்பின் சகோதரியே! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்ட ஒரு பெண் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபியவர்களின் நடைமுறைகளுக்கும் வழிப்பட்டு நடப்பார்கள் என்பதில் ஐயமில்லை. மார்க்க விடயங்களில் பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களைத் தேடாமல் அல்குர்ஆனின் கட்டளைக்கும் நபிகளாரின் அறிவுரைக்கும் அடிபணிவதே ஈமானின் மிக உன்னத நிலையாகும். மார்க்கம் ஒரு விடயத்தை ஏவுகிறது என்றால் அல்லது தடுக்கிறது என்றால் நிச்சயமாக அது தனக்கு நன்மையாகவே அமையும் என்பதில் ஈமானியப் பெண் உறுதியாக இருப்பாள். அத்தகைய ஈமானிய உறுதியோடு உன் வாழ்நாள் முழுவதும் நடைபயின்று பிற பெண்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என அனைவரையும் படைத்து பாதுகாக்கும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்.

# நபி வழியில் நம் தொழுகை

-ஹாபிழ் ARM. றிஸ்வான்-

- தொடர் 08

(ருகூஉவில் கடைப்பிடிக்க வேண்டியவை பற்றி இறுதியாக கலந்துரையாடப்பட்டது)

## 12) ருகூஉவிலிருந்து எழுந்து நிலைக்கு வருதல்

- ருகூஉவிலிருந்து நபியவர்கள் இரு கைகளையும் உயர்த்தி 'ஸமிஅல்லாஹுலிமன் ஹமிதஹ்' என்று கூறியவர்களாக நிலைக்கு வருவார்கள் (புஹாரி, முஸ்லிம்).

- பின்னர் பின்வரும் துஆக்களை மாறி மாறி ஓதிக்கொள்வார்கள்.

رَبَّنَا لَكَ الْحَمْدُ

اللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ

اللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَاوَاتِ وَمِلْءَ الْأَرْضِ ، وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ

## 13) ஸுஜூத் செய்தலும் அதில் தாமதித்தலும்

- நபியவர்கள் ஸுஜூதுக்கு செல்லும் போது தக்பீர் சொல்லிய வண்ணம் இரு கைகளையும் விலாவோடு சேர்த்து வைக்காமல் ஸுஜூதுக்கு செல்வார்கள் (அபூய∴லா, இப்னு ஹுஸைமா)

- ஸுஜூத் செய்வதற்காக குனியும் போது முதலில் இரு கைகளையும் நிலத்தில் வைப்பதா அல்லது இரு முழங்கால்களையும் வைப்பதா என்பது தொடர்பில் அறிஞர்கள் மத்தியில் கருத்து வேற்றுமை காணப்படுகிறது. முதலாவதாக கைகளையே நிலத்தில் வைக்க வேண்டும் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.இதற்கு பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் காட்டுகின்றனர். ''உங்களில் ஒருவர் ஸுஜூதுக்குச் செல்லும் போது ஒட்டகம் நிலத்தில் சாய்வது போன்று செல்ல வேண்டாம். (மாறாக) தனது இரு முழங்கால்களை வைப்பதற்கு முன் இரு கைகளையும் (நிலத்தில்) வைக்கவும் (அஹ்மத், அபூதாவூத், நஸாஈ)

ஆயினும் இரு முழங்கால்களையே முதலாவதாக நிலத்தில் வைக்க வேண்டும் என்று கூறுவோர் மேலுள்ள ஹதீஸை விளக்கும் போது, நபிகளார் ஒட்டகம் செல்வது போன்று ஸுஜூதுக்குச் செல்லக் கூடாது என்று தடுத்துள்ளார்கள். ஒட்டகமானது முதலாவதாக தனது இரு கைகளையே நிலத்தில் வைக்கிறது, எனவே ஒட்டகத்துக்கு மாறாக செய்ய வேண்டுமாயின் ஒருவர் தனது இரு முழங்கால்களையே முதலாவதாக நிலத்தில் வைக்க வேண்டும். ஆயினும் மேலுள்ள ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர் ''இரு கைகளை வைப்பதற்கு முன் முழங்கால்களை வைக்கவும்'' என்று நபியவர்கள் கூறியதை மாற்றி ''இரு முழங்கால்களை வைப்பதற்கு முன் கைகளை வைக்கவும் '' என்று தவறுதலாக கூறிவிட்டார் என்று வாதிடுகின்றனர். தமது கருத்துக்கு ஆதாரமாக மற்றுமொரு ஹதீஸை முன்வைக்கின்றனர். ''நபியவர்கள் ஸுஜூதுக்குச் செல்லும் போது தமது கைகளை வைப்பதற்கு முன் முழங்கால்களை (நிலத்தில்) வைப்பதைக் கண்டேன் '' என்று வாஇல் இப்னு ஹுஜ்ர் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். (அபூதாவூத், திர்மிதி, நஸாஈ)

இக்கருத்தை மறுக்கும் முதல் சாரார் வாஇல் இப்னு ஹுஜ்ர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அறிவிக்கும் ஹதீஸை பலவீனமானது என்றும் முந்திய ஹதீஸில் அறிவிப்பாளர் நபியவர்களின் வார்த்தையை மாற்றிக் கூறிவிட்டார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று மறுப்பதோடு, இந்த ஹதீஸில் வந்துள்ளவாறு இரு கைகளையே முதலாவதாக நிலத்தில் வைக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர்.

இரு சாராரும் பிரபலமான ஹதீஸ்கலை அறிஞர்கள் என்பதோடு, இரு சாராரின் கருத்துகளும் நிராகரிக்கப்பட முடியாதளவு வலுவானவையாகும். இரு கருத்துகளும் ஹதீஸ்களை ஆய்வு செய்து பெறப்பட்ட முடிவுகளே. இவ்விரண்டில் எந்தக் கருத்து சரியானது என்பதை அல்லாஹ்வே அறிவான். இவ்விரண்டு முறைகளில் எதைப் பின்பற்றினாலும் அதற்கு கூலி கிடைக்கும் - இன்ஷாஅல்லாஹ். ஏனெனில் நபியவர்கள் கூறினார்கள் : ''ஒரு அறிஞர் (அல்குர்ஆன், ஹதீஸை) ஆய்வு செய்து சரியான முடிவைப் பெற்றால் அவருக்கு இரு கூலிகள் உண்டு. மற்றுமொருவர் பிழையான முடிவைப் பெற்றாலும் (ஆய்வு செய்தமைக்காக) அவருக்கு ஒரு கூலி உண்டு'' (புஹாரி, முஸ்லிம்)

* ஸுஜூத் செய்யும் போது ஏழு உறுப்புகள் நிலத்தில் பட வேண்டும்.

''ஏழு உறுப்புகள் மீது ஸுஜூத் செய்யுமாறு (அல்லாஹ்வினால்) நான் ஏவப்பட்டுள்ளேன். நெற்றி, மூக்கு, இரு உள்ளங்கைகள், இரு முழங்கால்கள், இரு பாதங்களினதும் விரல் நுனிகள் ஆகியவையே அந்த ஏழு உறுப்புகளுமாகும்'' என நபியவர்கள் கூறினார்கள் (புஹாரி, முஸ்லிம்). (இந்த ஹதீஸில் நபியவர்கள் நெற்றியையும் மூக்கையும் ஒன்றாக கணக்கிட்டுள்ளார்கள்)

- இரு கை விரல்களையும் (பொத்தாமல்) விரித்து அவற்றை ஒன்றோடொன்று சேர்த்தவர்களாக கிப்லாவை முன்னோக்கி வைப்பார்கள். (அபூதாவூத், ஹாகிம், இப்னு ஹுஸைமா, பைஹகீ)



- இரு கைகளையும் (நிலத்தில் வைக்கும் போது) தங்களது தோள் புயங்களுக்கு நேராக வைப்பார்கள் (அபூதாவூத், திர்மிதி).

- சில நேரங்களில் இரு கைகளையும் தமது இரு காதுகளுக்கு நேராக வைப்பார்கள் (அபூதாவூத், நஸாஈ)

- தமது இரு முன் கைகளையும் நிலத்தில் படுக்க வைக்காமல் உயர்த்தியவர்களாக, இரு விலாப்புறங்களோடு அவற்றை சேர்க்காமல் விலக்கி வைப்பார்கள். (புஹாரி, முஸ்லிம், அபூதாவூத்)

- ஆட்டுக் குட்டியொன்று செல்லுமளவுக்கு இரு கைகளுக்கும் முழங்கால்களுக்குமிடையில் இடைவெளி இருக்கும். (முஸ்லிம், இப்னு ஹிப்பான்)

- இரு பாதங்களையும் ஒன்றோடொன்று சேர்த்து வைப்பார்கள். (தஹாவி, இப்னு குஸைமா, ஹாகிம்)

- இரு கால் விரல்களையும் (மடக்கி) கிப்லாவை முன்னோக்கி வைப்பார்கள் (புஹாரி, அபூதாவூத்)

- ஸுஜூத் செய்யும் போது ஆடைகளையோ தலை முடியையோ (கைகளால்) சேர்த்துப் பிடிக்கக் கூடாது என எனக்கு அல்லாஹ்வினால் கட்டளையிடப்பட்டுள்ளது என நபியவர்கள் கூறினார்கள் (புஹாரி, முஸ்லிம்)

-இன்ஷா அல்லாஹ் தொடரும்-

# "தலைக்குள் ஒரு டைம் பொம்" – டொக்டர் ரயீஸின் டயறியிலிருந்து..!

நாலக 11 வயது பள்ளி மாணவன். 6 ஆம் தரத்தில் படிக்கும் அவன் மிகுந்த திறமைசாலி. 5 ஆம் தர பொது உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைந்து 6 ஆம் தரத்தில் படிப்பதற்காக கொழும்பு டி. எஸ். சேனநாயக்க கல்லூரிக்கு அனுமதி பெற்றிருந்தான். மஹரகமயிலிருக்கும் நாலக தினமும் பாடசாலை வேனில் கொழும்பு டி. எஸ். சேனநாயக்க கல்லூரிக்கு வருவது வழக்கம்.

வழமையாக அதிகாலை 6 மணிக்கு வீட்டிலிருந்து புறப்படும் நாலகவை ஏற்றிச் செல்லும் பாடசாலை வான் 7.30 மணிக்கு பாடசாலையை வந்தடையும். பாடசாலை சந்தியில் இறங்கி வகுப்பறைக்கு நடந்து செல்வான் நாலக.

ஒரு திங்கட்கிழமை நாலக வானில் இறங்கி நடந்து செல்லும் போது கால் இடறி கீழே விழுந்து விட்டான். எதிர்பாராமல் விழுந்து விட்ட அவனை அவனோடு சென்ற சக மாணவர்கள் கைகொடுத்துத் தூக்கி விட்டனர். எழும்பிய அவன் நடந்து செல்லும் போது மீண்டும் வகுப்பறைக்கு அருகே விழுந்து விட்டான். விழுந்து எழுந்ததும் தனக்குக் கடுமையாக தலை வலிப்பதாகச் சொன்ன நாலகவை வகுப்பாசிரியர் பத்திரமாய் வீட்டுக்கு அனுப்பி விட்டார்.

வீட்டுக்குச் சென்றதும் உடனே தூங்கி விட்டான். தூங்கி எழுந்த நாலகவால் கட்டிலிலிருந்து இறங்கி நடந்து வர முடியவில்லை. ஒரு முறை வாந்தியும் எடுத்து விட்டான். உடனே பெற்றோர் பக்கத்தில் இருந்த தனியார் வைத்திய நிலையம் ஒன்றுக்கு பையனைக் கொண்டு சென்றனர். அவனைப் பரிசோதித்த டாக்டர், "உடனடியாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள்" என்று சொல்லி விட்டார். இந்த நிலையில் தான் அவர்கள் அந்தப் பையனோடு எங்கள் வோர்டுக்கு வந்து சேர்ந்தனர்.

பையனுக்கோ ஏதோ ஒரு நோய் இருக்கிறது என்று அறிந்து கொண்ட தாய் கண்ணீர் மல்க ஆதரவுடன் பையனின் தலையை வருடி முடியை கோதிவிட்டுக் கொண்டிருந்தாள்.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை முழுமையான பரிசோதனை செய்து முடித்ததும் பையனுக்கு பல பிரச்சினைகள் இருப்பது தெரிய வந்தது. சாதாரணமாக கண்கள் இரண்டும் சேர்ந்து ஒரு பொருளைப் பார்ப்பதுதான் இயற்கையாக இறைவன் ஏற்படுத்தியிருக்கும் அமைப்பு.

பையனின் கண்களோ இரண்டு ஒரு சேர இயங்க மறுத்து விட்டன. ஒன்று வடக்கையும் மற்றையது கிழக்கையும் பார்க்க ஆரம்பித்துவிட்டன. பையனோ ஒரே நேரத்தில் பல விம்பங்கள் தெரிவதாக சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் அருந்தும் பானத்தையும், உண்ணும் உணவையும் வாய்க்குள் இருந்து தொண்டைக் குழியினூடாக விழுங்க முடியாமல் தடுமாறினான். விழுங்க முடியாத நிலையில் வாய்க்குள் இருக்கும் உணவு வெளியில் கொட்ட ஆரம்பித்தது. மிக அழகாக எழுத முடியுமாய் இருந்த அந்தப் பையனுக்கு கையால் ஒரு பேனாவை கூட ஸ்திரமாக பிடித்துக் கொள்ள முடியாதவாறு கைகள் நடுங்க ஆரம்பித்தன. இப்படிப் பல பிரச்சினைகள்.

பரிசோதனை முடிவில் பையனின் நோய் என்ன வென்பது மிகத் தெளிவாக விளங்கியது. இதனை எப்படிப் பெற்றோருக்கு சொல்வது என்பது எங்களுக்குப் பெரும் சுமையாக இருந்தது. விரும்பத்தகாத ஒரு செய்தியை அறிவிப்பதும் அதைத் தொடர்ந்து வரும் சோக உணர்வுகளோடு சேர்ந்து சோகத்தில் பங்கேற்பதும் வைத்தியசாலைகளில் தினமும் நடக்கும் நிகழ்வுகள். அவ்வாறான சூழ்நிலையில் எங்களது கண்களும் கூட கலங்கி இருக்கின்றன. அப்படி ஒரு நிலைதான் இந்தப் பையன் விடயத்திலும்.

நடுத்தர வயதான அந்தப் பெற்றோருக்கு நாலகவுடன் மூன்று வயதுப் பெண் குழந்தை ஒன்றும் உண்டு.மிகத் திறமைசாலியான அந்தப் பையன் டி.எஸ். சேனநாயக்க கல்லூரியில் வகுப்பில் முதல் மாணவனாக வருவான். 5 ஆம் தர பொது உளச்சார்புப் பரீட்சையிலும் மிகச் சிறந்த சித்தி பெற்ற அவனுக்கு கல்லூரியில் நல்ல இடம் கொடுக்கப்பட்டிருந்தது. படிப்பில் மட்டுமல்லாது விளையாட்டு மற்றும் கம்பியூட்டர், நீச்சல் துறைகளிலும் மிகச் சிறந்து விளங்கிய நாலக பெற்றோருக்கும் குடும்பத்துக்கும் பாடசாலைக்கும் கூட ஒரு பெரும் சொத்தாக விளங்கினான். பாடசாலையில் இருந்து நாலகவின் சுகம் விசாரிப்பதற்காக வந்த தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை இதனைச் சொல்லிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் பையனின் மூளைக்குள் "டைம்பொம்" போன்று ஒரு கட்டி இருக்கிறது என்பதை எப்படிச் சொல்ல முடியும்? இந்தப் பையன் பெரியவனாக வேண்டும். பல சாதனைகளைச் செய்ய வேண்டும். பெற்றோருக்கும் குடும்பத்துக்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருந்தனர் அந்த அப்பாவிப் பெற்றோர். குழந்தையைப் பெற்ற ஒவ்வொரு பெற்றோரின் எதிர்பார்ப்பும் இதுவே. விஷேடமாக இந்தப் பையனைப் பெற்ற பெற்றோரின் எதிர்பார்ப்பு இன்னும் ஒரு படி மேல். இந்த எதிர்பார்ப்புகளும் கட்டியிருந்த மனக் கோட்டைகளும் ஒரு கணத்தில் தகர்த்தெறியப்படப் போகின்றன.

அந்தப் பையனை ஊவு ளுஉயெ பரிசோதனைக்கு உட்படுத்தினோம். அந்தப் பரிசோதனை மூலம் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மூளையை துண்டு துண்டாக வெட்டிப் பார்த்தது போன்று படம் எடுக்க முடியும். இதன் மூலம் மூளைக்கு உள்ளே இருக்கும் நோய்களைக் கண்டு பிடிக்க முடியும். இந்தப் பரிசோதனைகளை நாலகவுக்கு செய்த போது மூளையின் மிக முக்கியமான பகுதியான அடி மூளையில் (Brain Stem) புற்றுநோய் வகையைச் சேர்ந்த ஒரு கட்டி வளர்ந்திருப்பது தெரியவந்தது. டீசயைை ளுவநஅபடழைஅய அந்தக் கட்டியை ஒபரேஷன் செய்து குணப்படுத்த முடியாது. நான் இதனை எழுதும்போது கூட அந்தப் பையன் எங்கள் வாட்டில் இருந்து கொண்டிருக்கிறான். கட்டியைக் கண்டு பிடித்து 25 நாட்கள் ஆகிவிட்டன.

மிகப் பெரிய மனிதனாக வருவான் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட அந்தப் பையன் பாவம். எல்லாத் துவாரங்களிலும் "டியூப்" வருவதும் போவதுமாய் கட்டிலிலே நினைவிழந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

எஞ்சியிருக்கும் அவனது ஒருசில நாட்களும் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பையனுக்கு இதற்கு மேல் இறைவன் இந்த உலகத்தில் "ரிஸ்க்" வைக்கவில்லை என்பது மிகத் தெளிவாகி வருகிறது. மரணத்தை மறந்திருக்கும் எமக்கு இதுவொரு சிறந்த பாடம். உலக வாழ்க்கையில் எமது குழந்தைகள் முன்னேற வேண்டும். பெரியவனாக வேண்டும், புகழ் பெறவேண்டும் என்பதற்காக எவ்வளவு முயற்சிக்கிறோம்.

அவ்வளவு முயற்சியும் நிச்சயமாகத் தேவைதான். அதேநேரம் இவ்விடயம் எம்மையும் எமது குழந்தைகளையும் இந்த உலகில் மூழ்கடித்து விடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நம்மில் எத்தனைபேர் இப்படியான டைம்பொம் நோய்களை வைத்திருக்கிறோம் என்பதை அறியோம்.

அதேபோல் எத்தனை பேர் இத்தகைய நோய்க்கிரையானார்கள் என்பதையும் நாம் அறியோம். இந்த நிலையில் நாமும் நமது குடும்பமும் மரணத்துக்குத் தயாரானவர்களாக வளர்வதை, வாழ்வதைத் தவிர நமக்கு வேறு வழியே இல்லை.

# இறைத்தூதரை நிந்திக்கும் ஈனர்களின் செயல்

இஸ்லாத்தையும் இறுதி இறைத் தூதர் நமது உயிரிலும் மேலான பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அவமதிக்கும் வகையில் அமெரிக்காவைச் சேர்ந்த சில படத் தயாரிப்பாளர்கள் Innocence of Muslims என்ற பெயரில் ஒரு குறுந் திரைப்படத்தை வெளியிட்டு, உலகெங்கும் வாழும் முஸ்லிம்களினதும் நபிகளாரை நேசிக்கும் பல்லாயிரக்கணக்கான மாற்று மதத்தாரினதும் உணர்வுகளை புண்படுத்தியுள்ளனர்.

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் மைக்கல் எச். ஹார்ட் என்ற அமெரிக்க அறிஞர், வரலாற்றில் இதுவரை தோன்றிய பிரபலமான மனிதர்களுள் நூறு பேரைத் தெரிந்தெடுத்து அவர்களுள் முதலாமவராக முஹம்மத் நபிகளாரை தேர்ந்தெடுத்து The Hundred என்ற நூலை வெளியிட்டு நபியவர்களை கௌரவப்படுத்திய அதே அமெரிக்க மண்ணிலிருந்து நபியவர்களை இழிவுபடுத்துகின்ற இத் திரைப்படம் வெளியாகியிருக்கிறது.

உலகில் இதுவரை தோன்றிய மனிதர்களிலேயே மிக உயர்ந்த, உன்னதமான மாமனிதர் என்று பல்லாயிரக்கணக்கான மாற்று மதத்தார் கூட ஏற்றுக்கொள்கின்ற இறைத்தூதர் அவர்களை மிக மோசமான மனிதராக சித்தரிக்கின்ற இத்திரைப்படத்தை வெளியிட்டமையானது, இஸ்லாத்தின் வேகமான வளர்ச்சியின் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியினதும் அதியுச்ச பொறாமையினதும் வெளிப்பாடு என்றால் அது மிகையாகாது.

இத்திரைப்படம் வெளியானதைத் தொடர்ந்து உலகெங்கிலுமுள்ள இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் தமது எதிர்ப்பினை பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

இத்திரைப்படம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஸஊதி அரேபியாவின் தலைமை முப்தி அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் அவர்கள், முஹம்மத் நபியவர்களை அவமதிக்கும் செயலை தண்டனைக்குரிய குற்றமாக கருதி சட்டமியற்ற வேண்டும் என்று உலக நாடுகளுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் அவர் தனது அறிக்கையில், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இறைத்தூதரை அவமதிக்கும் திரைப்படத்திற்கு எதிராக போராடுவோர் வன்முறையில் இருந்து விலக வேண்டும், முஸ்லிம்கள் கோபத்திற்கு அடிமையாகி விடக் கூடாது. நிரபராதிகளைக் கொலை செய்வதையும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிப்பதையும் தவிர்த்து இவ்வாறான திரைப்படங்களை தயாரிப்போரின் இலட்சியங்களை நிறைவேற்றாமல் இருப்பதில் முஸ்லிம்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இஸ்லாத்தின் புனிதங்களை அவமதிப்பதை சர்வதேச அளவில் தடைசெய்ய வேண்டும் என எகிப்தின் இஸ்லாமிய அறிஞர் அஷ்ஷெய்க் அஹ்மத் அத் தையிப் அவர்கள் கூறியுள்ள அதே வேளை நிரபராதிகள் தாக்கப்படக்கூடாது என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கு முன்னரும் பல நாடுகளிலிருந்து நபிகளாரைக் கேவலப்படுத்தும் பல கேலிச் சித்திரங்கள், திரைப்படங்கள் வெளியாகியிருந்த போதிலும் அவற்றை வெளியிட்ட கயவர்களின் நோக்கங்கள் நிறைவேறவில்லை. மாறாக பல்லாயிரக்கணக்கான மாற்றுமதத்தவர்கள் நபிகளாரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். அவ்வாறே இத்திரைப்படமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வழிசெய்யும் இன்ஷா அல்லாஹ்.

**அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான்: அல்லாஹ்வின் பிரகாசத்தை தம் வாய்களினால் ஊதி அணைத்துவிட அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் இறை நிராகரிப்பாளர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான் (அல்குர்ஆன் 9 : 32)**

## நபிகளார் பற்றி ஸஹாபாக்கள் கூறிய சில வார்த்தைகள்

நபிகளாரிடம் அடுத்தவர்களை அவமதிக்கும் குணம் சிறிதும் இருந்ததில்லை. தமக்கு அன்பளிப்பாக கிடைக்கும் பொருள் அற்பமாக இருந்தாலும் அதைப் பெரிதாக மதிப்பார்கள். எப்போதும் அவர்களது உதடுகளில் புன்னகை தவழ்ந்துகொண்டிருக்கும். அவசியமின்றி பேசமாட்டார்கள். பிறரோடு எப்போதும் அன்போடு பேசுவார்கள். அடுத்தவர்களை விரண்டோடச் செய்யமாட்டார்கள். தனக்காக அவர்கள் பிறரை ஒருபோதும் பழிவாங்கியதில்லை. கோபப்பட்டதில்லை. அல்லாஹ்வின் வரம்புகள் மீறப்படும் போதே நடவடிக்கை எடுப்பார்கள்.

## நபிகளார் பற்றி மாற்றுமத அறிஞர்கள்

முஹம்மத் நபியவர்கள் இன்று நம்மிடையே இருப்பார்கள் என்றால், இன்று மானுட நாகரிகத்தையே அழித்திட முனைந்திருக்கும் பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வுகாண்பதில் வெற்றிகண்டிருப்பார்
- அறிஞர் பேர்னாட்ஷோ-

துவேஷம் என்னும் கருமேகக் கூட்டத்தை விலக்கி விட்டு உண்மையென்னும் கதிரவன் ஒளிபரப்பும் நன்னாள் ஒன்று வரலாம். அப்போது மேல் நாட்டு ஆசிரியர்கள் 'முஹம்மது ஒரு சரித்திர நாயகர்' என்று கூறுவதோடு இப்போது நிறுத்திக் கொள்கிறார்களே, அப்படியின்றி, அதற்கப்பால் சென்று அவர்களுடைய வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து மனிதத்துவத்தின் வரலாறு என்ற பொன்னேடுகளில் நபிகள் நாயகம் அவர்களுக்குரிய இடத்தை அளிப்பார்கள்.
-எஸ்.எச். லீடர்-

இஸ்லாத்தின் நிறுவனருடையதை விடவும் அதிக ஆச்சரியம் தரக்கூடிய வாழ்க்கை முறை வரலாற்றிலே வேறெங்கும் இல்லை. அவரைப்போல் உலகத்தின் தலைவிதியில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்திய மனிதர்களைக் காணுதலும் அரிது.
-ஜி.ஜி. கெல்லட்-

# ஐயமும் தெளிவும்

**ஐயம் :** சில பெண்கள் தொழும் போது மிகவும் மெல்லிய துணியால் தலையை மறைத்துத் தொழுகின்றனர். இதனால் அவர்களின் முடி தெரிகிறது. இதைக் கண்டும் சிலர் (மௌலவியாமார் உட்பட) அவர்களிடம் சுட்டிக்காட்டாமலிருக்கின்றனர். இதனைத் தடுக்காமலிருப்பவர்களுக்கு பாவம் உண்டா?

- M.K. **பாதிமா, ஏறாவூர் 03**A

**தெளிவு :** பெண்கள் தொழும்போது மாத்திரமன்றி மற்ற சந்தர்ப்பங்களிலும் உடல் உறுப்புகள் தெரியும் வண்ணம் மெல்லிய ஆடைகள் அணிவது ஹராமாகும். ஒரு தடவை நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் ஆஇஷா றழியல்லாஹுஅன்ஹா அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த போது அவ்விடத்திற்கு அன்னை ஆஇஷா அவர்களின் சகோதரி அஸ்மா றழியல்லாஹுஅன்ஹா அவர்கள் மெல்லிய ஆடை அணிந்து வந்தார்கள். அப்போது நபியவர்கள், பருவமடைந்த பெண் இவ்வாறு மெல்லிய ஆடை அணிந்து வெளிச்செல்வது கூடாது என்று தடுத்தார்கள் (அபூதாவூத்).

அறியாமையின் காரணமாக அல்லது அறிந்திருந்தும் பொடுபோக்கின் காரணமாக அல்லது ஷைத்தானின் தூண்டுதலினால் பல பெண்கள் இப் பாவத்தைச் செய்வதைக் காணும் போது அத் தவறைச் சுட்டிக்காட்டித் திருத்துவது கடமையாகும். ஒரு தவறைக் கண்டும் அதைத் தடுக்காமலிருப்பது அல்லாஹ்விடம் தண்டனைக்குரிய குற்றமாகும். பனூஇஸ்ரவேலர்கள் அல்லாஹ்வினால் அழிக்கப்பட்டதற்கு அவர்கள் தமது சமூகத்தில் நடக்கும் தவறுகளை தடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்ததும் ஒரு காரணமாகும்.

அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான் : ‘உங்களில் ஒரு கூட்டத்தினர் (மக்களை) நன்மையின் பால் அழைப்பவர்களாகவும் நல்லதை ஏவுபவர்களாகவும் தீய செயல்களைத் தடுப்பவர்களாகவும் இருக்கவும். அவர்கள்தான் வெற்றி பெற்றோர்’ (3 : 104).

நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் முஃமினான ஆண்களினதும் பெண்களினதும் பண்பு என்றும் அல்லாஹ் குறிப்பிடுகிறான் (9 : 71). தவறு என்று தெரிந்தும் ஒருவர் அதைத் தடுக்காமல் இருக்கிறார் எனில், அவருடைய ஈமானில் பாரிய பலவீனம் இருக்கிறது என்பதே அர்த்தமாகும்.

எனவே, நன்மைகளின் பால் மக்களைத் தூண்டுவதும் தவறை, பிழையைக் காணும் போது பக்குவமாக அதைத் திருத்துவதும் முஃமினான ஆண், பெண் அனைவர் மீதும் - குறிப்பாக மார்க்கத்தைக் கற்றுணர்ந்தவர்கள் மீது - கட்டாயக் கடமையாகும். இல்லையேல் மறுமையில் அல்லாஹ்வின் தண்டனைக்குள்ளாக நேரிடும் என்பதை மறந்துவிடக் கூடாது. அல்லாஹ் நம்மைக் காப்பாற்றுவானாக.

**ஐயமும் தெளிவும்**

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்

**இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் :**

இறைம்பிக்கையாளர்கள் நரகத்திலிருந்து தப்பி வரும்போது சொர்க்கத்திற்கும், நரகத்திற்கும் இடையிலுள்ள ஒரு பாலத்தில் தடுத்து நிறுத்தப்படுவார்கள். அப்போது உலகில் (வாழ்ந்த போது) அவர்களுக்கிடையே நடந்த அநீதிகளுக்கு அந்தப் பாலத்திலேயே ஒருவருக்கொருவர் கணக்குத் தீர்த்துக் கொள்வார்கள். இறுதியில் அவர்கள் பாவங்களிலிருந்து நீங்கித் தூய்மையாகி விடும்போது சொர்க்கத்தில் நுழைய அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். முஹம்மதின் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! அவர்கள் சொர்க்கத்தில் உள்ள தம் வசிப்பிடத்தை, உலகில் அவர்களுக்கிருந்த இல்லத்தை விட எளிதாக அடையாளம் கண்டு கொள்வார்கள். (ஆதாரம் : ஸஹீஹுல் புஹாரி)


CGS

இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணனி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?

சேவைகள்

01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues

இன்றே அழையுங்கள் 0772300420

ஏறாவூரில்

கணனி மற்றும் மடிக்கணனி (DESKTOP / LAPTOP) திருத்தம் செய்தல்



மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள

யூரோ போன் வேர்ல்ட்

இல.17, பிரதான வீதி, ஏறாவூர்

Fax: 065 2240283

டயலொக் மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill) மற்றும் மின்சாரப் பட்டியல் இங்கே செலுத்த முடியும்.

மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.

# பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஐந்து கேள்விகள்

1. முனாபிக்குகள் நரகின் அடித்தட்டில் இருப்பார்கள் என்ற வசனம் இடம்பெறும் அத்தியாயம் எது?
2. மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய இரு மாகாணங்களும் எவை?
3. மனோ இச்சையைக் கட்டுப்படுத்தி வாழ்பவருக்கு அல்லாஹ் வழங்கும் பரிசு யாது?
4. ஆஇஷா றழியல்லாஹுஅன்ஹா அவர்களின் சகோதரியின் பெயர் யாது?
5. அண்மையில் அணிசேரா நாடுகளின் மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?

---

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **05.10.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசில்களை வீடு வந்து சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிப்படமாட்டா.) அல்லது தெரிவுசெய்யப்படுவோர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**முதலாம் இடம் :** MIF. **மஹ்பூபா, ஓடாவியார் வீதி, ஏறாவூர்**
**இரண்டாம் இடம் :** Mrs.MUA. **கபூர்,** MJM. **வீதி, புதிய காத்தான்குடி 03**
**மூன்றாம் இடம் : நியாஸ் ஹன்பி, தைக்கா வீதி, ஏறாவூர்** 01B

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. MM. அஸ்மத் அபா, நெசவு நிலைய வீதி, மீராவோடை 04
2. SHM. ஹுஸைன், பிரதான வீதி, ஏறாவூர் 02
3. MN. பாதிமா றுமைஸா, ஓட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் 06
4. MMM. முப்ரி, நெசவு நிலைய வீதி, மீராவோடை 04
5. I. இப்ஹாம், காதியார் வீதி, ஏறாவூர் 06

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்

1. நோன்பாளியைப் பரிசுத்தப்படுத்துவதும் ஏழைகளின் பசியைப் போக்குவதும்
2. மைதானத்தில்
3. மஸ்ஜிதுந் நபவி, மஸ்ஜிது குபா, மஸ்ஜிதுல் பத்ஹ்
4. அரகான்
5. வருடம் முழுவதும் நோன்பு நோற்ற நன்மை


CGS
College for Tech Studies
இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

இம்முறை **A/L** எழுதிய மாணவர்களுக்கான கணனி வகுப்புக்கள் எதிர்வரும் செப்டம்பர் 03ம் திகதி முதல் ஆரம்பமாகும்.

**CGS இன் கணனி கற்கை நெறிகள்**

* Diploma in Personal Computer Based Application Packages
* Diploma in Computer Hardware
* Diploma in Web Designing
* Diploma in Computer Networking & Administration
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Computer for Kids





☺ கொம்பியூட்டர் எக்ஸசரிஸ்
☺ இன்டெர்நெட் டொங்கள்
☺ அன்டி வைரஸ், கேம்ஸ் மற்றும் கொம்பியூட்டர் சொப்ட்வெயார் சிடிகள்





சகலவிதமான மொபைல் போன்கள், மொபைல் போன்களின் உதிரி பாகங்கள் என்பன உத்தரவாதத்துடனும் நியாய விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்

☺ மின்சார பட்டியல் கட்டணம் (CEB)
☺ டயலொக், எயார்டெல் பட்டியல் கட்டணம் (மொபைல், TV, இன்டெர்நெட்)
☺ மோட்டார் சைக்கில், ஆட்டோ, ஹேன் டிரக்டர் என்பவற்றிற்கான லைசன்ஸ் இன்சுரன்ஸ் (அமானா தகாபுல்)

என்பன எவ்வித கட்டண கழிவுமின்றி உடனுக்குடன் மேற் கொள்ளலாம்

R-tel COMMUNICATION
ஏ.ஆர்.எம் ஹாஜி கட்டிடம், பிரதான வீதி ஏறாவூர் - 03. (பழைய பொம்பே பசார் எதிரில்)

COMPUTER ACCESSORIES MOBILE PHONE & ACCESSORIES TEL: 065 22 400 33 / 077 877 22 00